**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 241/2018** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கண்ணன் | **வயது** | : | 72 |
| **த.பெ** | : | முனுசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | கொம்மனந்தல் | **தொழில்** | : | பேருந்து நடத்துனர் (ஓய்வு) |

**17.02.2026 – பி. வா.சா.1 குறுக்கு விசாரணை**

1) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 05.02.2002 என்றும் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணம் எந்த தேதியில் பெறப்பட்டுள்ளது என்றால் 01.04.2025-ல் பெறப்பட்டது. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சாஆ.7 வழக்கு தாக்கல் செய்த ஆவணங்கள் என்றால் சரிதான். என்னிடம் பி.வா.சா.8 என்ன ஆவணம் என்றால் நானும் எனது மனைவியும் அண்ணாமலை மீது அசல் வழக்கு எண். 333/1995 உள்ள இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பாணை ஆகும். மேற்படி அசல் வழக்கில் அயிட்டம் 1, 2,7, 10, 11, 13 ஆகிய சொத்துக்களுக்கு பாகம் கோரமுடியாது என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மீதமுள்ள அயிட்டங்களில் நிலம் உள்ளதா அல்லது வீடு உள்ளதா என்றால் மொத்தமாக நிலம் உள்ளது.

2) அசல் வழக்கு எண். 333/1995-ல் 6 ம் அயிட்டம் சர்வே நெம்பர் 365/3 ல் வாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் வீடு கட்டவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதிகள் மேற்படி சர்வே நெம்பரில் வீடு கட்டி, பட்டா பெற்று உள்ளார்கள் என்றும், அது என்னை கட்டுப்படுத்தாது என்றும் நான் கூறியுள்ளேனா என்றால் பட்டா வாங்கியிருந்தால் அதை மறுத்து கூறியுள்ளேன். மேற்படி அசல் வழக்கு எண். 333/1995 ல் இந்த வழக்கின் வாதிகள் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதிகள் தாவாசொத்தில் 60 வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள் ஆகையால் வாதிகளை மேற்படி அசல் வழக்கு எண். 333/1995 ல் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்றால் அவர்கள் மேற்படி தாவாசொத்தை அனுபவிக்கவில்லை.

3)என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ-9 ஆவணம் என்னவென்றால் என் உடன்பிறந்த சுலோச்சனா, அண்ணாமலை மற்றும் என் மீது தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கு, உயர்நீதிமன்றம் வரை சென்று பாகம் கிடையாது என்று தள்ளுபடி ஆகிவிட்டது. உயில் முன்னிலைக்கு மேற்படி பி.சா.ஆ-9 ஆவணத்தில் உள்ள வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. மேற்படி பி.சா.ஆ-9 குறிப்பிப்பட்டுள்ள அசல் வழக்கு எண் 23/1993 ன் சர்வே நெம்பர் 365/3 உள்ளதா என்றால் உள்ளது. வாதிகள் உறவினர்களா என்றால் ஆமாம், வாதிகள் எனக்கு சித்தப்பா முறையில்

உறவினர் ஆவார். வாதிகளின் வீட்டிற்கு நல்லது கெட்டதிற்கு நானும், என் வீட்டில் நல்லது கெட்டதுக்கு வாதிகளும் சென்றுவருவோம் என்றால் நார்மலாக சென்றுவருவோம்.

4)வாதிகள் தற்போது உள்ள வீட்டிற்கு தான் நான் நல்லது கெட்டதிற்கு சென்றுவருவேன் மேலும் வாதிகள் நான் குடியிருக்கும் வீட்டிற்கு தான் நல்லது கெட்டதிற்கு வருவார்கள் என்றால் வாதி அந்த வீட்டில் குடியிருக்கவில்லை. நல்லது கெட்டதிற்கு வாதிகள் வீட்டிற்கு நான் சென்றதாக கூறுகிறேன், அப்படியென்றால் எந்த வீட்டிற்கு நான் சென்றேன் என்றால் சாணார்பாளையத்தில் உள்ள பிள்ளையார் கோவில் தெருவில் சர்வே நெம்பர் 365/3 க்கு கிழக்கு பக்கத்தில் வீடு உள்ளது. வாதிகள் தற்போது குடியிருக்கும் தெருவும் பிள்ளையார் கோவில் தெருவில் தான் உள்ளது என்றால் சரிதான். அப்படியென்றால் வாதிகள் தற்போது குடியிருக்கும் வீட்டிற்குதான் நான் நல்லது கெட்டது என்றால் சென்றுவருவேன் என்றால் சரிதான்.

5)நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ-2 மற்றும் பி.சா.ஆ-3 அடமான கடன் பத்திர ஆவணங்கள் சர்வே நெம்பர் 365/3 ற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் ஆகையால் அந்த ஆவணங்கள் வாதிகளை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. மேலும் நான்தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ-7 புலவரைபடமானது நாங்களாகவே பதிவிறக்கம் செய்த ஆவணம் என்றால் நாங்களாக எடுக்கவில்லை, ஆன்லைனில் எடுத்தோம். மேற்படி பி.சா.ஆ-7 ஆவணம் வட்டாட்சியர் சான்றளிக்காத ஆவணம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ-7 ஆவணத்தில் வட்டாட்சியரின் சீல் மற்றும் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை.

6)ஆகையால் பி.சா.ஆ.7 ஆவணம் பொய்யான வரைபடம் என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண். 333/1995 மற்றும் அசல் வழக்கு எண். 23/1993 வாதிகளை தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் அப்போது சேர்க்காமல் தற்போது வாதிகள் தாக்கல் செய்த வழக்கில் எதிர்வாதம் செய்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிகள் குடியிருந்து வருவது எனக்கு பல வருடங்களாக தெரியும், ஆகையால் தற்போது நான் எதிர்வாதம் செய்வது ஏற்றுகொள்ள முடியாது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER
Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.19 10:44:19 +0530

District Munsif,
Polur.